DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர் இ.கனகஸ்ரீ | Caste | : | |
| Father Name | : | இருளாண்டி காந்தி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **28.07.2026.**

**PW - 15**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி கி.ஆ.பெ.வில் அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் உடல் இயங்கியல் துறையில் உதவி பேராசியராக பணியில் இருக்கிறேன். கடந்த 03.09.2022 அன்று அதே மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் சட்ட மருத்துவ துறையில் போதகராக பணியில் இருந்தபோது முசிறி காவல் நிலைய குற்ற எண்.311/2022 என்ற வழக்கில் சம்மந்தப்பட்டு இறந்துபோன முதலில் பெயர் விலாசம் தெரியாதிருந்து, பின்னர் விசாரணையில் பிரபு, 30 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய காவல் உதவி ஆய்வாளரிடமிருந்து வேண்டுகோள் கடிதத்தை பெற்று காவலர் வெங்கடேசன் என்பவர் பிரேதத்தை அடையாளம் காண்பிக்க, அதே தினம் பிற்பகல் 4.40 மணிக்கு பிரேத பரிசோதனையை துவங்கினேன். அதன் விவரங்கள் பின்வருமாறு :

பிரேதத்தின் அங்க மச்ச அடையாளங்கள் :

1. இடது நெஞ்சில் சித்தன் என்று பச்சைக் குத்தப்பட்டிருந்தது.

2. இடது முன்கையில் MNP என்ற பச்சைக் குத்தப்பட்டிருந்தது.

3. மரண விறைப்புத்தன்மை முழுவதுமாக மறைந்து பிரேதமானது அழுகிய நிலையில் காணப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு முன் பிரேதத்தின் வெளிப்புற தோற்றம்

நல்ல உடல்வாகுடய ஆண் பிரேதத்தில் மரணத்தின் காரணமாக தோலானது உடல் முழுவதும் உரிந்து ஆங்காங்கே ஒட்டியும் காணப்பட்டது. கைமற்றும் பாதத்தின் தோலானது முழுவதுமாக பிரிந்து நகக்கண்ணில் மட்டும் ஒட்டி காணப்பட்டது. முகமானது வீங்கியும் இருகண்களும் வெளியே தள்ளியும், மூக்கின் சவ்வு பகுதிகள் இல்லாமலும் காணப்பட்டன. வயிறு மற்றும் பிறப்புறுப்புகள் வீங்கியும் காணப்பட்டது. உடல் முழுவதும் வெளியிலும், உள்ளேயும் புழுக்கள் 0.5 x 0.5 cm முதல் 4 x 1 cm அளவு வரை காணப்பட்டன. உடலிலிருந்து முடி பிரிந்தும், தலைத்தோல் கபாலத்திலிருந்து பிரிந்தும் காணப்பட்டது. அழுகிய நிலையில் உடலின் மேல்பரப்பில் உள்ள இரத்த நாளங்கள் நீல மற்றும் பச்சை நிறத்தில் துடை, இருகால்கள், வயிறு மற்றும் இரு கைகளின் முன்பக்கமும் காணப்பட்டது.

பற்கள் வலது மேல்தாடையில் முதல் கடவாய் பல் இல்லாமல் இருந்தது. வேறு எந்த மாற்றங்களும் பற்களில் இல்லை.

உடலில் இறப்பதற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் :

1. கிழிந்த காயம் கீழ்கண்ட இடங்களில் காணப்பட்டது.

a. வலது முன்தலையில் 1 x 1 எலும்பு ஆழம் வரை காணப்பட்டது.

b. இடது பக்க முன்தலையில் 3 x 2 எலும்பு ஆழம் வரை மற்றும் 5 x 4 எலும்பு ஆழம் வரை காணப்பட்டது.

c. வலது பக்கவாட்டு தலையில் 7 x 2 எலும்பு ஆழம் வரை காணப்பட்டது.

2. தலைத்தோல் கபாலம் மற்றும் மூளை சவ்வை கூறாய்வு செய்ததில்

பரவலாக சிவந்த கன்றிய காயம், தலைத்தோல் அடியில் 24 x 14 cm அளவில் தலையின் முன்பகுதியிலும், வலது பக்கவாட்டு பகுதியிலும் காணப்பட்டது.

<u>கீழ்கண்ட இடங்களில் கபாலத்தில் இரத்தக்கசிவுடன் கூடிய எலும்பு முறிவுகள் காணப்பட்டது.</u>

1. நொருங்கிய எலும்பு முறிவு வலது பக்கவாட்டு தலை எலும்பில் 7 x 6 cm அளவில் காணப்பட்டது.

2. சாய்வான எலும்பு முறிவு 9 x 0.5 cm அளவில் இடது பக்கவாட்டு தலை எலும்பில் காணப்பட்டது.

3. 14 x 0.5 cm முழுவதுமாக எலும்பு முறிவு நடு கபால குழி முழுவதும் காணப்பட்டது.

மூளையானது இரத்தம் தோய்ந்து அழுகிய நிலையில் அடர் பழுப்பு வெள்ளை திரவமாக காணப்பட்டது.

மற்ற விவரங்கள் :

இருதயம் மிருதுவாகவும், அதன் தன்மையை இழந்து தரையில் வைத்தால் தட்டையாகவும் காணப்பட்டது. இருதய அறைகள் காலியாக இருந்தன. நுரையீரல்கள் சுருங்கியும், அதன் வெட்டுத்தோற்றத்தில் அழுகியும் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் மிருதுவாகவும், அதன் வெற்றுத்தோற்றத்தில் அழுகியும் காணப்பட்டன. மூச்சுக்குழாய், நாவடி எலும்பு இயல்பான நிலையில் இருந்தன. இரைப்பையில் 350 கி அளவில் ஜீரணமாகாத மஞ்சள், பச்சை நிற சமைத்த அரிசி உணவு இருந்தது. அழுகிய வாடையுடன் அதன் சிலேடும படலம் அழுகியும் காணப்பட்டது. சிறு மற்றும் பெரு குடல் காற்றினால் நிரம்பி வீங்கி காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. இடுப்பு எலும்பு மற்றும் முதுகெலும்பு நெடுவரிசை இயல்பு நிலையில் இருந்தது.

வலது தொடை எலும்பு DNA பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

மண்டை ஓடு Superimposition க்காக அனுப்பிவைக்கப்பட்டது. உடல் உள்ளுறுப்புக்கள் இரசாயன பகுப்பாய்விற்காக வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. நெஞ்செலும்பானது பாசி (Diatom) Analysis க்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இறுதி கருத்து :

1. வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து இறந்தவரது உடல் உள்ளுறுப்புக்களில் எந்தவிதமான விசமோ அல்லது மதுவோ கண்டறியப்படவில்லை.

2. இறந்தவரது நெஞ்சு எலும்பிலும், அவர் இறந்து கிடந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட மாதிரி தண்ணீரை பரிசோதித்ததில் இரண்டிலுமே பாசி (Diatoms) கண்டறியப்படவில்லை.

நான் வழங்கிய இறுதி கருத்துரையானது இறந்த நபரானவர் அவருக்கு ஏற்பட்ட தலை காயத்தினால் இறந்திருக்கக்கூடும் என்றும், இறந்த நேரமானது பிரேத பரிசோதனைக்கு முன்பாக 3 முதல் 5 நாட்களுக்கு மேல் இருக்கக்கூடும் என்று கருத்து வழங்கினேன். எனது பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆகும். 24.04.2023 ம் தேதியிட்ட எனது கடிதம் **அ.த.சா.ஆ.9** ஆகும். எனது இறுதி கருத்துரை **அ.த.சா.ஆ.10** ஆகும். 26.10.2022 ம் தேதியிட்ட வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் ஆய்வறிக்கை எடுத்து வந்துள்ளேன். அது **அ.த.சா.ஆ.11** ஆகும். 12.12.2022 ம் தேதியிட்ட Diatom தொடர்பான அறிக்கை எடுத்து வந்துள்ளேன். அது **அ.த.சா.ஆ.12** ஆகும். மேற்சொன்ன நபரை ஒருவர் அருவாள் போன்ற ஆயுதத்தால் தலையில் வெட்டுவதாலும், பிறகு வாதநார மரக்கட்டை போன்ற ஆயுதத்தால் தலையில், உடலில் பலமுறை மாறிமாறி அடித்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டு அதனால் அவருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் என்னிடம், பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தபோது பெயர் அடையாளம் தெரியாத பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. நான் எனது பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை ஆகிய விவரங்களை பொறுத்துதான் சாட்சியமளித்துள்ளேன். அ.த.சா.ஆ.8 பிரேத பரிசோதனையில் பிரபு என்ற பெயர் குறிப்பிடவில்லை. அ.த.சா.ஆ.9 கடிதத்தில் அந்த விவரத்தை குறித்துள்ளேன். பொதுவாக நிலத்தில் கிடக்கும் பிரேதத்தை எடுத்து வந்து பிரேத பரிசோதனை செய்வதற்கும், தண்ணீரில் கிடக்கும் பிரேத்தை எடுத்து வந்து பிரேத பரிசோதனை செய்வதற்கும் பிரேதத்தில் வேறுபாடுகள் இருக்கும் என்றால் பிரேதத்தில் ஏற்படும் அழுகும் தன்மை தொடர்பான மாறுபாடுகள் இருக்கும். நான் அ.த.சா.ஆ.8 அறிக்கையில் நீரில் மூழ்கியிருந்த பிரேதம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்த பிரேதம் சாக்கில் கட்டப்பட்டிருந்ததா அல்லது ஓடும் தண்ணீரில் ஓரமாக கிடந்ததா என்று கேட்டுத் தெரிந்துகொண்டேனா என்றால் கேட்டு தெரிந்துகொண்டேன். சேற்று மணல் அருகிலிருந்து பிரேதத்தை எடுத்ததாக போலிசார் சொன்னார்கள். சேற்று மணல் அருகே இருந்து பிரேதத்தை எடுத்திருந்தால் அதில் சேறு, சகதி ஒட்டியிருக்க வாய்ப்புண்டு என்றால் தண்ணீர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தால் அதற்கு வாய்ப்பு குறைவு. என்னிடம் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் சம்பவ நாள் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் பிரேதத்தை கண்டுபிடித்த நாள் தான் குறிப்பிட்டிருந்தார்கள். 03.09.2022 அன்று பிரேதத்தை கண்டுபிடித்ததாக குறிப்பிட்டிருந்தார்கள். நான் அன்றைய தினமே பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் குறிப்பிட்ட இறப்பிற்கு முந்தைய காயங்கள் நீரில் சுமார் 3 முதல் 5 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் பிரேதம் மூழ்கியிருக்கும்போது காயத்தின் வாய்ப்பகுதியின் ஓரம் சிவந்து

காணப்படுமா அல்லது வெளிரி காணப்படுமா என்றால் சிவந்து காணப்படும். நான் மோடி மருத்துவ குறிப்புக்கு முரணாக மேற்கண்ட விவரத்தை கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது பிரேத பரிசோதனையில் நுரையீரல் சுருங்கியும் அழுகியும் இருந்ததாக கூறியுள்ளேன். நுரையீரல்கள் மற்றும் மூச்சுப்பாதையை குறுக்குவெட்டு செய்து பார்த்தேன். அதை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். நுரையீரல் மற்றும் மூச்சுப்பாதையில் நீர் காணப்படவில்லை. அதனால் நான் அதை குறிப்பிடவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்ன ஆயுதங்களை காட்டி போலிசார் என்னை விசாரித்தனர். அந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. பிரேத பரிசோதனை செய்தன்று காட்டவில்லை. அதிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து காண்பித்தார்கள் என்று ஞாபகமில்லை. போலிசார் ஆயுதங்களை காட்டி விசாரித்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. உடலில் மீன் கடித்ததற்கான தடயங்களில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.